## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி.

## O.S.No.113/2021

2025 ம் ஆண்டு ஜனவரி மாதம் 03 -ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969 ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி திருமதி. A. சீதாலெட்சுமி, M.A.,B.L. மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் கூறப்பட்டு உறுதி கூறப்படுகிறது.

**நாள் : 03.01.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிவானந்தம் | ஜாதி | : | |
| த/பெயர் | : | கணேசன் | மதம் | : | |
| கிராமம் | : | | தொழில் | : | |
| வட்டம் | : | | வயது | : | |

வா.சா.1 முன்னிலை பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1) என்ன பரிகாரம் கோரி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனது தகப்பனாரின் குடும்பத்திற்கு சொந்தமான பூர்வீக சொத்தில் தாவா சொத்தானது எனது தகப்பனாருக்கு ஒதுக்கப்பட்டது. எனது அப்பா கடந்த 2009 ல் 6 மாதங்கள் கோமாவில் இருந்தார். அதை வாய்ப்பாக பயன்படுத்தி 1ம் பிரதிவாதியான எனது தம்பி சண்முகம் அவரது பெயரில் செட்டில்மெண்ட் செய்து கொண்டார் என்பது குறித்து என் அப்பா, அம்மா இறந்து 10 மாதம் கழித்து தான் தெரியவந்தது. என் அப்பா கணேசனுக்கு 3 ஆண்மகன்கள் ஒரு பெண் பிள்ளை வாரிசுகள் ஆவார்கள்.எனது சகோதரியின் பெயர் ராஜலெட்சுமி. அதிராம்பட்டிணத்தில் என் தங்கையை திருமணம் செய்து கொடுத்துள்ளோம்.

2) என் தகப்பனாருக்கு சொந்தமான தாவா சொத்தை என் தம்பியான 1ம் பிரதிவாதிக்கு செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விவரம் எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் என் அம்மா இறந்தபிறகு கருமாதி காரியங்கள் செய்தபோது மீதமுள்ள சொத்துக்களை அனைவரும் சமமாக பிரித்து கொள்ளலாம் என நான் சொன்னேன். அப்போதுதான் என் தம்பியான 1ம் பிரதிவாதி தாவா சொத்தை அவரது பெயருக்கு என் தகப்பனார் செட்டில்மெண்ட் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என சொன்னார். அப்போதுதான் எனக்கு தெரியவந்தது.

3) என் தகப்பனார் எந்த தேதியில் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்பது குறித்த எனக்கு தெரியுமா என்றால் நான் சார்பதிவாளர் அலுவலகத்தில் என் தம்பி பெயரிலுள்ள செட்டில்மெண்ட் ஆவணத்தை எடுத்து பார்த்தபோது தான் கடந்த 19.06.2009-ல் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பது குறித்து தெரியவந்தது. ஆனால் அன்றைய தேதியில் என் தகப்பனார் இறந்துபோனார். எவ்வாறு என் தகப்பனார் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்படுத்திக்கொடுக்க முடியும் என எனக்கு சந்தேகமாக உள்ளது. இறப்பதற்கு 6 மாதங்களுக்கு முன்னதாக என் அப்பா கோமாவில் இருந்தார். என் அப்பா கடந்த 19.06.2009 ல் இறந்துவிட்டதாக எனக்கு போன் வந்தது. என் அப்பா கடந்த 19.06.2009-ல் இறந்துவிட்டதாக எனது வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். என் அப்பா கடந்த 21.06.2009-ல் இறந்துவிட்டதாக வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றாலும், தற்போது பொய்யாக கடந்த 19.06.2009-ல் இறந்துவிட்டதாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(வழக்கறிஞர் வேண்டுக்கோளிற்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது)

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

A SEETHALAKSHMI

Digitally signed by A SEETHALAKSHMI
DN: cn=A SEETHALAKSHMI, ou=TIRUVARUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamilnadu, c=IN
Date: 2025.01.04 17:47:00 +0530

District Munsif

Mannargudi.